https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

06TH OCTOBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 100



## எம்பிக்களின் இராஜதந்திர கடவுசீட்டுக்கள் ரத்து

முன்னாள் எம்பிக்கள் 216 பேருக்கு வழங்கப்பட்டிருக்கும் இராஜதந்திர

02

## 1500 பேரிடம் ஆயுதங்கள்:

### மீள ஒப்படைக்குமாறு அரசு உத்தரவு!



அரசிடம் இருந்து 1500 பேர் 1690 துப்பாக்கிகளை பெற்றுள்ளனர் என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு அவற்றை உடனடியாக அரசிடம் மீள ஒப்படைக்குமாறு அவர்களுக்கு

02

# கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய பகுதியில் ரகசிய ஆயுத களஞ்சியம்



கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய பகுதியில் ரகசிய ஆயுத களஞ்சியம் ஒன்று இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் டீ-56 துப்பாக்கி தோட்டாக்கள் 25 ,218 உட்பட ஆயிரக்கணக்கான தோட்டாக்கள் உள்ளன என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தனிநபர்களுக்கும் எம்பிக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஆயுதங்களை மீளப்பெறும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில்தான் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தோட்டாக்களுக்கான கணக்குப் பட்டியல் இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

## முன்னாள் எம்பிக்கள் 170 பேரின் சொத்து விபரங்கள்

### லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவிடம்

முன்னாள் எம்பிக்கள் 170 பேரின் சொத்து விபரங்கள் லஞ்ச ,ஊழல் ஆணைக்குழுவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற பிரதி செயலாளர் சமிந்த குலரத்னம் தெரிவித்துள்ளார்.

இந்த சொத்து விபரங்கள் தொடர்பில் எவராவது சந்தேகம் எழுப்பினால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று லஞ்ச ,ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



## எம்பிக்கள் அல்லாதோரின் பாதுகாப்பு நீக்கம்

கடந்த அரசால் எம்பி பதவிகள் வகிக்காதோருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தத்து. அந்தப் பாதுகாப்பு இப்போது நீக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பசில் ராஜபக்சவுக்கு பத்து, கரு ஜயசூர்யவுக்கு ஆறு, கருணா அம்மானுக்கு எட்டு என பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

02





புதுசுடர்
www.puthusudar.lk
2024 OCTOBER 06 - SUNDAY

# சஜித்-ரணில் இணைவு சாத்தியமா?

ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்கவை வீழ்த்துவதற்கு ரணில் மற்றும் சஜித் தரப்பு எவ்வளவு முயற்சி எடுத்தபோதிலும் அது முடியவில்லை. இறுதியில் அனுரவே ஜனாதிபதியாகிவிட்டார்.

அடுத்து நாடாளுமன்றத் தேர்தலிலாவது அனுரவை வீழ்த்த வேண்டும்நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்று அதே தரப்பு முயற்சி செய்கிறது.

ரணிலையும் சஜித்தையும் இணைத்தால் அனுரவை இலகுவாக வீழ்த்தலாம் என்று நினைத்துக்கொண்டு இவர்கள் இப்போது இருவரையும் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது. சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும்,சஜீத்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

2024 ஜனாதிபதி தேர்தலில் சஜித் அனுரவிடம் தோல்வியடைந்தபோதிலும் ரணிலை விடவும் சஜித்துக்கு மக்கள் செல்வாக்கு அதிகம் என்பதை சஜித் நிரூபித்துள்ளார்.

இந்த நிலையில்,சஜித் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதானது ரணிலுக்குத்தான் நன்மையே தவிர சஜித்துக்கு அல்ல.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள்.அந்தக் கட்சியை இரண்டு,மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார்.அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொண்டுதான் இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார் ரணில்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார்.தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?

சஜித்தும் ரணிலும் இணைந்தால் நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்பது வெறும் கனவுதான்.

புதிய ஜனாதிபதி அனுரவின்ஆட்சி முறைமை இப்போது அவருக்கு வாக்களிக்காத மக்களைக்கூட கவர்ந்துள்ளது.இதனால் அனுரவின் கட்சியை நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்துவது கஷ்டம்தான்.

இந்த அரசு ஆகக்குறைந்தது 120 ஆசனங்களை எடுக்கும் என்று இந்த அரசுக்கு எதிரான உதய கம்மன்பிலவே கூறியுள்ளார்.

ஆனால், அரசின் எதிர்பார்ப்போ மூன்றில் இரண்டு பெரும்பான்மையாகும்.அதற்கு ஏற்பவே அரசு காய் நகர்த்துகிறது.

அரசின் தற்போதைய வேலைத் திட்டங்கள் மூன்றில் இரண்டைப் பெற்றுத் தரும் என்றே தெரிகிறது.

குறிப்பாக,விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபா உர மானியம் என்ற அரசின் அறிவிப்பானது மூன்றில் இரண்டைப் பெற்றுத்தரும் ஓர் யுக்தியாகும்.

இதுபோல் மேலும் பல திட்டங்கள் மக்களைக் கவர்ந்துள்ளன.இவையெல்லாம் அரசுக்கு வெற்றிமேல் வெற்றியைக் குவிக்கும் எனலாம்.

ஆகவே,ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூட்டணி அமைத்தால்கூட நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதுதான் தற்போதைய அரசியல் நிலைமை.

---

## 1500...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிட்டுள்ளது.

இவர்களுள் முன்னாள் அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ எட்டு துப்பாக்கிகளையும், மஹிந்த ராஜபக்சவின் மகன் யோசித்த ராஜபக்ச ஏழு துப்பாக்கிகளையும் அவன்கார்ட் பாதுகாப்பு நிறுவன தலைவர் நிசங்க சேனாதிபதி ஒன்பது துப்பாக்கிகளையும் பெற்றுள்ளனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஆயுதங்களை பெற்றுள்ளவர்களுள் எம்பிக்களும் எம்பிக்கள் அல்லாதவர்களும் அடங்குகின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவிக்கிறது.

## எம்பிக்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேலும், ரவி கருணாநாயக்க,அகில விராஜ் காரியவசம்,ஜோன் அமரதுங்க, பி. ஹரிசன், சந்திரசிறி சூரியாராச்சி, விஜிதமுனி சொய்சா மற்றும் ருவன் விஜயவர்தன ஆகியோருக்கும் இரண்டு பொலிஸார் வீதம் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இதேபோல் மேலும் பல முன்னாள் எம்பிக்களுக்கும் முன்னாள் ஆளுநர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

## எம்.பிக்களின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கடவுச்சீட்டுக்களை ரத்துச் செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்களுக்கான இராஜதந்திர கடவுசீட்டுக்களில் மாற்றமில்லை.

முன்னாள் எம்பிமார்களின் மனைவிமார்,கணவன்மார் மற்றும் உறவினர்கள் ஆகியோருக்கும் இராஜதந்திர கடவுசீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.










எதிர்வரும் பொதுத் தேர்தல் 2024 இல் அதிக விருப்பு வாக்குகளைப் பெற
"புதுச்சுடர்" பத்திரிகையூடாக விளம்பரங்களை பிரசுரியுங்கள்...
**வாசகர்களின் அபிமானம் வென்ற முதல்தர மின்னிதழ் "புதுச் சுடர்"**

# ரணிலின் தோல்விக்கு இதுதான் காரணம்

ஊடகவியாலாளர்
எம்.ஐ.முபாறக்



கோத்தாவின் ஆட்சியில் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்பட்டு விலைவாசி அதிகரித்தபோதிலும் அதற்காக மக்கள் கோத்தாவை விரட்டவில்லை.

மின் வெட்டு மற்றும் எரிபொருள் வரிசை உண்டானதும்தான் மக்கள் வீதிக்கே இறங்கினர். கோத்தாவை விரட்டினர்.

அப்போது பாரிய பிரச்சினையாகத் தெரிந்தது வரிசை யுகம்தான்.

இதை நன்றாக அவதானித்த ரணில் இந்த வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்தால் மக்களைத் அடக்கிவிடலாம் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சியடையத் தொடங்கிவிட்டது என்று மக்களை நினைக்க வைக்கலாம் என்று கணக்குப் போட்டு வரிசை யுகத்தை நீக்கினார்.

வரிசை யுகத்தை நீக்குவதற்காக ரணில் வெளிநாட்டு கடன்களை அடைக்காமல் அப்படியே நிறுத்திவிட்டு அந்தப் பணத்தை எரிபொருள் கொள்வனவுக்குப் பயன்படுத்தினார்.

ஐஆகு இடம் பணம் வாங்குவதற்காக அது விதித்த நிபந்தனைதான் அரசு இலாபமடைய வேண்டும் என்பதாகும்.

இலாபத்தை ஈட்டுவதற்காக ரணில் ஏயுவு வரியை 18 வீதமாக அதிகரித்தார். இதனால் பொருட்களின் விலைகள் அதிகரித்தன.

ஊதிய வரியை அறிமுகப்படுத்தி அரச ஊழியர்களின் சம்பளத்தை வெட்டினார்.

இதனால் வருமானம் குறைந்து விலைவாசி அதிகரித்தது.தாக்குப் பிடிக்க முடியாத அரச ஊழியர்கள் தொழில் தேடி வெளிநாடுகளுக்கு ஓடினர்இ

மறுபுறம், மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதுதான் ஏழை முதல் பணக்காரர்கள் என அனைவரையும் தாக்கத் தொடங்கியது.

ஏற்கனவே விலைவாசி அதிகரித்து வருமானம் குறைந்து கஷ்டப்படும் மக்களால் இந்த அசாதாரண மின் கட்டணத்தை எதிர்கொள்ள முடியவில்லை.

மின் கட்டணம் மூவாயிரம் ரூபாவைத் தாண்டினால் மின்சாரம் துண்டிக்கப்படும். அபராதமாக மூவாயிரம் ரூபா விதிக்கப்படும்.

இந்த சுமையை சுமக்க முடியாத மக்கள் துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீளிணைக்கவில்லை.

இதனால் நாடு பூராகவும் 10 லட்சம் வீடுகள் இருளில் மூழ்கின.

இப்படித்தான் அரசு வருமானத்தை ஈட்டி வரிசை யுகத்தை நீக்கியது.

இவ்வாறு தம்மைச் சுரண்டி வரிசை யுகம் நீக்கப்படுவதை விட அந்த வரிசை இருப்பதே மேல் எனக் கருதிய மக்கள் இரணிலின் ஆட்சி மேலும் தொடர்ந்தால் தாம் முற்றாக அழிந்துவிடுவோம் என்று அஞ்சினர்.

இதனால் ரணிலை விரட்டும் சிறந்த ஆயுதமாக மாக்கள் பார்த்தது அனுரவை.

இப்படித்தான் வரிசை நீக்கம் ரணிலுக்கே ஆபத்தாக அமைந்தது.

உண்மையில், அரசுக்கு வருமாணத்தை ஈட்டுவதற்கு சிறந்த வழி ஒன்று இருந்தது.

அதுதான் 4500 வர்த்தகர்களிடம் இருந்து வரவேண்டிய ஒரு லட்சம் கோடி ரூபா வரி நிலுவை.

அதைப் பெற்றிருந்தால் மேற்படி வரிகளை கொண்டுவந்து மக்களை இப்படி சிக்கலில் தள்ளியிருக்கத் தேவையில்லை.

**ஏன் செய்யவில்லை?**

ரணில் முதலாளித்துவத்துக்கு ஆதரவானவர். முதலாளிகளுக்கும் திருடர்களுக்கும் எதிராக செயற்படமாட்டார்.

மேலும்இமக்களால் நிராகரிக்கப்பட்ட மொட்டு கட்சி எம்பிக்களை தன்னுடன் சேர்த்துக்கொண்டமையும் ரனிலின் தோல்விக்கு மற்றுமொரு காரணமாகும்.



# நிறைவேற்றப்படும் வாக்குறுதிகள்

இலங்கையில் இப்போது ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

அனைத்து இன மக்களும் விரும்பும் ஒரு கவர்ச்சி கரமான அரசாக அது தெரிகிறது.

தெற்காசியா விலேயே முதல் முதலாக இடதுசாரி கட்சி ஒன்று இப்போது இலங்கையில் ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

ஜனாதிபதியைத் தோழர் என்று அழைக்கும் வாய்ப்பு ஒன்று நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தோழர் அனுரகுமார திஸ ாநாயக்க இன்று முழு நாடும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதியாக வந்துள்ளார்.

ஒரு வார்த்தையேனும் இனவாதம் பேசாமல் பொருளாதாரக் கொள்கையை மாத்திரம் பேசி வெற்றிபெற்ற முதலாவது ஜனாதிபதி.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தமிழ்,முஸ்லிம்,சிங்கள மக்களின் விருப்பத்துக்குரிய ஜனாதிபதியாக மாறியுள்ளார்.

அனுரவின் வெற்றியானது ஊழலை ஒழிப்பதற்கும் -பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும் மக்களால் வழங்கப்பட்ட ஆணையாகும்.

2015 மைத்திரி-ரணில் அரசில் மக்கள் ஏமாற்றப்பட்டதுபோல் இந்த அரசிலும் அமைந்துவிடக்கூடாது என்பதே மக்களின் விருப்பம்.

மஹிந்தவின் ஊழலுக்கு எதிராகவே அந்த அரசு அமைந்தது.ஆனால்,நடந்தது என்ன...

அனைத்துத் திருடர்களும் நல்லவர்களாக் கப்பட்டனர்.புதிதாக மத்திய வங்கியையும் கொள்ளையடித்து விட்டுச் சென்றனர். நாட்டின் பொருளாதாரம் இந்தளவு மோசமான நிலைக்குச் செல்வதற்கு அந்தக் கொள் ளையே காரணம்.

அந்தக் கொள்ளை யர்களை ரணில் பாதுகாத்த அழகோ தனி. இதன் காரண மாகத்தான் கோத்தா விரட்டப் பட்டதும் அந்த இடத்துக்கு ரணிலை நியமித்தது ராஜபக்ச கூட்டம்தான்.

அவர்தான் அந்தத் திருடர்களை பாதுகாப்பார் என்பதை சரியாகப் புரிந்துகொண்ட மஹிந்த ரணிலை ஜனாதிபதி யாக்கினார்.

ரணில் வெகு சீக்கிரத்திலேயே அந்தப் பணியை செவ்வனே செய்து முடித்தார்.சில நாட்களிலேயே மொட்டு எம்பிக்கள் வெளியே வரத் தொடங்கினர்.

ரணில் அந்தத் திருடர்களை பாதுகாத்த விதம்தான் ரணிலை மக்கள் இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதற்கு காரணம்.

2020 தேர்தலிலும் இதே காரணத்துக்காகவே மக்கள் ரணிலைத் தோற்கடித்தனர். அதாவது ,2015 காலப்பகுதியில் ஊழலுக்குத் துணை போனமைக்காக.

ஆகவே,இந்தத் தேர்தலில் மக்களின் ஆணையானது ஊழலை ஒழிப்பதற்காகத்தான் என்பதை அனுர தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார்.

அந்தப் புரிதலுக்கு ஏற்ப செயற்படுவதில்தான் அனுரவின் உண்மையான வெற்றி தங்கியுள்ளது.

ஆனால்,அந்த ஆணைக்கு ஏற்ப -அவர் வழங்கிய வாக்குறுதிக்கு ஏற்ப ஜனாதிபதி செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

வந்த வேகத்தில் முன்னாள் எம்பிக்கள்,அமைச்சர்கள், ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த 800 இற்கு மேற்பட்ட வாகனங்களை ஒரே மூச்சில் அள்ளியெடுத்தார்.

அதனைத் தொடர்ந்து முன்னாள் எம்பிக்கள் தங்கியுள்ள அரச இல்லங்களை உடனடியாகக் காலிசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அதிலும் முக்கியமாக வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து அரசுக்கு வர வேண்டிய வரி நிலுவையை உடனடியாக வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வரி பணத்தை வைத்துத்தான் வட் வரியைக் குறைக்க முடியும். அத்தியாவசிய பொருட்களின் வட் குறைக்கப்படும் என்பது அனுரவின் தேர்தல் வாக்குறுதியாகும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத் தேர்தலில் அரசால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியும்.



# Lenovo தயாரிப்புகள் வெளியீடு

IT Gallery Group (Pvt) Ltd. நிறுவனமானது, 2011 ஆம் ஆண்டு முதல் தகவல் தொழில்நுட்ப (IT) விநியோகச் சந்தையில் முக்கிய பங்கு வகிக்கின்ற ஒரு நிறுவனமாக இருந்து வருகின்றது.

அந்த வகையில்இ உலகளாவிய தொழில்நுட்ப சக்தியாக விளங்கும் Lenovo வர்த்தகநாமத்தின் புதிய உற்பத்தித் திறன் கொண்ட மடிகணனிகளை நிறுவனம் தற்போது இலங்கையில் அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இந்த வெளியீட்டில், வணிக வல்லுநர்களிடையே பிரபலமான தெரிவான ThinkPad X1 Carbon தொடர் மற்றும் சக்திவாய்ந்ததும் சிறிய ரகத்திலானதுமான ThinkPad P16 Gen 2 workstation ஆகியவனவும் அடங்குகின்றன.

இந்த அறிமுகத்தின் மூலம், IT Gallery Group ஆனது, இலங்கைச் சந்தையில் தற்போது வரையான Lenovo வர்த்தகநாமத்தின் மிகவும் புத்தாக்கமான புதிய தயாரிப்புகளை வெளியிட்டுள்ளதால், இலங்கையை அதி வேக மட்டத்தை நோக்கி அழைத்துச் செல்ல தயார் நிலையில் உள்ளது.

# அவுஸ்திரேலிய அரசின் திட்டங்கள் Swinburne Pathway திட்டத்தை பாதிக்காது



உயர் கல்விக்காக அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவுஸ்திரேலிய அரசாங்கம் தேசிய திட்டமிடல் (**National Planning Level - NPL**) முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. 2024 ஆகஸ்ட் 27 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட இந்த மூலோபாய திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைக்கும் வரம்பு முந்தைய 2023 ஆம் ஆண்டில் இணைத்துக் கொண்ட அளவிற்கு கட்டுப்படுத்தி, சர்வதேச மாணவர் பங்கேற்பை கட்டுப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த முடிவு கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு அதிகரித்து வரும் கேள்வியை சிறப்பாக நிர்வகிக்க தேவையான வசதியை வழங்குகிறது. மேலும், இந்த தேசிய திட்டமிடல் முறை மூலம் உயர்தர திட்டங்களை வழங்குவதற்கும், அதிக மாணவர் ஆதரவு சேவைகளை வழங்குவதற்கும், தெரிவுசெய்யப்பட்ட தொழில்களில் வேலைவாய்ப்புகளுக்கு மாணவர்களை சிறந்த முறையில் தயார்படுத்தவும் பயிற்சி நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். தேசிய திட்டமிடல் நிலை வரம்புகள் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அமலுக்கு வரும். 2025 இல் 270,000 புதிய சர்வதேச மாணவர்கள் தொடங்க உள்ளனர். இதில் பதிவுகள் அல்லது சலுகைகள் உள்ளடங்காது.

# தீவாவின் 6ஆவது தொழில் முனைவோர் திட்டம்




'தீவா கரத்திற்கு வலிமை தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம்' ஆனது, பெண் தொழில்முனைவோரை ஆதரிப்பதற்காக, **Hemas Consumer Brands** நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தக நாமமான தீவாவிற்கும் **Women in Management (WIM)** அமைப்பிற்கும் இடையேயான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஒத்துழைப்பு முயற்சியாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் 5 மாகாணங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு, 275 இற்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் தமது தொழில்களை மேம்படுத்த வலுவூட்டி உள்ளது.

இந்தத் திட்டமானது, இப்பெண்களுக்குத் தேவையான தொழில் முனைவுத் திறன்களை வழங்குவதன் மூலம், அவர்களின் தொழில்களை மேம்படுத்த உதவுவதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது. இத்திட்டத்தின் 6ஆவது கட்டமானது, ஒரு நாள் கருத்தரங்காக எதிர்வரும் 2024 ஒக்டோபர் 07ஆம் திகதி அனுராதபுரம் நுவரகம் பலாத்த மத்திய பிரதேச செயலகத்தில் மு.ப. 9.00 மணி முதல் நடாத்தப்படவுள்ளது.

# Prime Lands இற்கு விருதுகள்



இலங்கையின் முன்னணி சொகுசு ரியல் எஸ்டேட் நிறுவனமான **Prime Lands Residencies PLC** சமீபத்தில் நடைபெற்ற **LK Domain Registry** மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட 14ஆவது **BestWeb.lk** 2024 போட்டியில் **'The Grand Ward Place' www.thegrand.com.lk** இணையத்தளத்திற்காக இரண்டு மதிப்புமிக்க விருதுகளை சுவீகரித்து டிஜிட்டல் புத்தாக்க செயற்பாட்டாளராக மீண்டும் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. அதிசொகுசு **condominium** இன் இணையத்தளமானது, **Best Mobile User Experience Corporate Website**இற்கான தங்க விருதையும், **Best Corporate Website**இற்கான வெள்ளி விருதையும் பெற்றுள்ளமை அனைத்து தளங்களிலும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு தனித்தன்மை வாய்ந்த இணையவழி அனுபவத்தை வழங்கும் நிறுவனத்தின் திறனை பிரதிபலிக்கின்றது.

ஆகஸ்ட் 14, 2024 அன்று **Cinnamon Grand** ஹோட்டலில் நடைபெற்ற கோலாகலமான விழாவில், **Prime Lands Residencies PLC**யின் அதிகாரிகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன. அங்கு முன்னணி டிஜிட்டல் புத்தாக்க செயற்பாட்டாளர்கள் மற்றும் தூர நோக்க செயற்பாட்டாளர்கள் ஒன்றுகூடி தொழில்நுட்ப சிறப்பை பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

# மூலப்பொருள் மீட்பு தொழிற்சாலை திறப்பு



INSEE Cement நிறுவனத்தின் கழிவு முகாமைத்துவப் பிரிவும்இ இலங்கையில் நிலைபேணத்தக்க கழிவு முகாமைத்துவத் தீர்வுகளில் முன்னோடியுமான ஐளேநுநு நுஉழஉலஉடநஇ புத்தளத்தில் அமைந்துள்ள அதன் புதிய, பெண்கள் தலைமையிலான மூலப்பொருள் மீட்பு (Material Recovery Facility - MRF) தொழிற்சாலையை திறந்து வைத்துள்ளமை குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது.

புத்தாக்கம்மிக்க இத்தொழிற்சாலை, இலங்கை எங்கிலும் பிளாஸ்திக் கழிவுகளை குறைப்பதில் INSEE Ecocycle தற்போது முன்னெடுத்து வருகின்ற அர்ப்பணிப்பில் சாதனை மைல்கல் இலக்கினைக் குறித்து நிற்கின்றது.

MRF இனை நிறுவியுள்ளமை, இலங்கையில் பிளாஸ்திக் கழிவைக் குறைப்பதற்காக உலக வங்கி மற்றும் செயற்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (United Nations Office for Project Services - UNOPS) ஆகியவற்றின் விலைமதிப்பற்ற ஆதரவுடன், தெற்காசிய ஒத்துழைப்பு சூழல் நிகழ்ச்சித்திட்டத்தால் (South Asia Co-operative Environment Programme - SACEP) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள PLEASE (Plastic Free Rivers and Seas for South Asia) அதாவது தெற்காசியாவில் பிளாஸ்திக் அற்ற ஆறுகள் மற்றும் கடல்கள் என்ற செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பல்வேறுபட்ட முயற்சிகளின் கீழ் இடம்பெறும் முக்கியமான ஒரு பாகமாகக் காணப்படுகின்றது.




# க்ளோகார்ட் பஞ்ச சக்தி புதிய தோற்றத்துடன்...

இலங்கையின் வாய்ச் சுகாதார பராமரிப்பில் மிகவும் நம்பகமான பெயரான க்ளோகார்ட், இயற்கை மூலப்பொருட்களின் பல்வேறு நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இயற்கை மூலிகை குணநலன் கொண்ட பற்பசையான Clogard Pancha Shakthi இனை புதிய தோற்றத்தில் அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது.

தமது நுகர்வோருக்கு முழுமையான மற்றும் பல்வேறு பயன்கள் கொண்ட வாய்ச் சுகாதார பராமரிப்பு தீர்வுகளை வழங்குவது தொடர்பில் க்ளோகார்ட் கொண்டுள்ள இணையற்ற உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

இரிமேதாதி தைலம் அடங்கிய புதிய க்ளோகார்ட் பஞ்ச சக்தியானது, வாடிக்கையாளர்களுக்கு ஐந்து முக்கிய நன்மைகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பற்குழி ஏற்படுவதை தடுத்து பற்களை பாதுகாத்தல், பல்ஈறு வெண்படைகள் உருவாவதை நீக்குதல், ஆரோக்கியமான ஈறுகள் உருவாக ஊக்குவித்தல், பற்களின் நிறமாற்றம் ஏற்படுவதை குறைத்தல், வாயை தூய்மையாக பேணி சுத்தமான சுவாசத்தை வழங்குதல் உள்ளிட்ட நன்மைகளை பஞ்ச சக்தி பற்பசை வழங்குகின்றது.

பற்குழிகள் மற்றும் ஈறு தொடர்பான பிரச்சினைகள்இ பற்களின் நிறமாற்றம், வெண்படைகள், வாய்த் துர்நாற்றம் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்களின் இந்த அனைத்து பிரச்சினைகளுக்குமான ஒரே தயாரிப்பின் மூலம் தீர்வுகளை வழங்குவது பஞ்ச சக்தி பற்பசையாகும்.

# Bollywood Boutique காட்சியறை திறப்பு



– சாறிகள், சல்வார்கள் மற்றும் குர்த்தாக்கள் மற்றும் லெஹெங்காக்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தெரிவுக்கு பிரசித்தி பெற்றஇ பாரம்பரிய ஆடைத்தெரிவுகளை வழங்கும் காட்சியறையான Bollywood Boutique, இலக்கம் 17, ஹம்டன் வீதி, கொழும்பு 06 என்ற முகவரியில் 7,000 சதுர அடி கொண்ட தாராளமான இட வசதி கொண்ட புதிய காட்சியறையை விமரிசையாக திறந்து வைத்துஇ முக்கியமான சாதனை மைல்கல்லொன்றை நிலைநாட்டியுள்ளது.

இந்நிகழ்வானது காட்சியறையின் 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் இடம்பெற்றுள்ளது மாத்திரமன்றி, நகரத்திலுள்ள நவநாகரிக ஆர்வலர்களின் ஷொப்பிங் அனுபவத்தை மேம்படுத்தும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில்இ தான் வழங்கும் ஆடையணி வரிசைகளை விரிவுபடுத்தியுள்ளது.

2014 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட Bollywood Boutique, மிகச் சிறந்த இந்திய மற்றும் பாகிஸ்தானிய நவநாகரிக ஆடைகளை நாடுவோரின் அபிமானம்பெற்ற தெரிவாக மாறியுள்ளது.

நுணுக்கமாக நெசவு வேலைப்பாடு கொண்ட ஆடம்பரமான சாறிகள் முதல் எடுப்பான தோற்றத்தை வழங்கும் திருமண லெஹெங்காக்கள் வரை இரு நாடுகளிலிருந்தும் உச்ச ஆடை வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட மிகச் சிறந்த தெரிவுகளை இக்காட்சியறை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.



# சம்பியனாக மகுடம்சூடிய நவலோக

NDB வங்கியின் அனுசரணையில் நடைபெற்ற வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான டிவிஷன் – C மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் டுழுடூஊ ஹோல்டிங்ஸ் அணியை 190 ஓட்டங்களால் வெற்றி கொண்ட நவலோக்க மருத்துவமனை அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

திவங்க கக்குலவெலவின் சகலதுறை ஆட்டம்இ சமில நதீஷின் அரைச் சதம் மற்றும் சம்பத் நிஸ்ஸங்கவின் அபார பந்துவீச்சு என்பன நவலோக்க மருத்துவமனை அணியின் வெற்றியில் பிரதான பங்காற்றின.

வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான டிவிஷன் – C மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிஇ கடந்த செப்டம்பர் 29ஆம் திகதி ப்ளூம்ஃபீல்ட் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நவலோக்க மருத்துவமனை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 265 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் இடதுகை துடுப்பாட்ட வீரரான திவங்க கக்குலவெல 5 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் உட்பட 87 பந்துகளில் 62 ஓட்டங்களைப் பெற்றதோடுஇ வலதுகை துடுப்பாட்ட வீரரான சமில நதீஷ் 3 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் உட்பட 37 பந்துகளில் 51 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

# வங்கியியல் மாணவர்களுக்கு பிரயோக அனுபவம்



இலங்கை வங்கியியலாளர் நிறுவகத்துடன் அமானா வங்கி ஏற்படுத்தியுள்ள பங்காண்மை தொடர்பில் அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, **IBSL** மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த தொழிற்பயிற்சி வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

இலங்கையின் எதிர்கால வங்கியியல் நிபுணர்களுக்கான நிபுணத்துவ அபிவிருத்தி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், பிரயோக அனுபவத்தை மேம்படுத்தவும் முன்வந்துள்ளது. இந்த உடன் படிக்கையில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் மற்றும் **IBSL** பணிப்பாளர் நாயகம் சி.பி.ஏ. கருணாதிலக ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர். அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "**IBSL** உடன் கைகோர்த்து மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.." என்றார்.

# ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவிற்கு கைகொடுக்கும் AIA இன்சூரன்ஸ்




**AIA** இன்சூரன்ஸ் மிகவும் உதவிகள் தேவைப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவுடன் கைகோர்க்கின்றது.

இந்த நன்கொடைத் திட்டமானது மிகவும் தேவையுடைய வறுமைப்பட்ட நோயாளிகளுக்கு பத்து (10) கண்புரை அறுவைச் சிகிச்சைகளுக்கு நிதியுதவியினை அளித்துள்ளதுடன் இதன் மூலமாக அவர்களுக்கு விலைமதிப்பற்ற கண்பார்வையினையும் மீண்டும் பரிசாக வழங்குகின்றது.

கண்புரை அறுவைச் சிகிச்சை என்பது ஒருவரின் வாழ்க்கையினை மாற்றியமைக்கும் ஒரு சத்திர சிகிச்சையாகும். இது பார்வையினை மீட்டெடுப்பது மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துகின்றது.

மேலும் இது தனிநபர்கள் தங்களின் சுதந்திரத்தினை மீண்டும் பெறவும் அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குத் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதற்கும் உதவுகின்றது.

# பிரிடிஷ் கவுன்சிலுக்கு சூரிய மின் உற்பத்தி



கொழும்பு பிரிடிஷ் கவுன்சில் அலுவலகமானது இன்றைய நாளில் தனது ஆற்றல் தேவைகளில் 100 சதவீதத்தை சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்யும் சூரிய சக்தி உற்பத்தி அமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ்ரூபவ் பிரிடிஷ் கவுன்சிலானது பசுமையாக மாறுவதற்கான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக 220 மாரி கொண்ட 353 சோலார் **PV** பேனல்களை நிறுவியுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம்கொழும்பு பிரிடிஷ் கவுன்சில் அலுவலகமானது அடுத்த 25 ஆண்டுகளுக்கு வருடம்தோறும் 285.97 டன் ஐ சேமிக்கும்.

இந்த உத்தியோகபூர்வ நிகழ்வானது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மேதகு அன்ட்ரூ பேட்ரிக் அவர்களின் அனுசரணையின் கீழ் பிரதி உயர்ஸ்தானிகர் லிசா வான்ஸ்டால் மற்றும் பிரிடிஷ் கவுன்சில் இலங்கையின் பணிப்பாளர் ஒர்லாண்டோ எட்வர்ட்ஸ் என்பனோரின் பங்குபற்றலின் கீழ் இந்த சூரிய மின்சக்தி அமைப்பின் உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வானது சிறப்பாக நடைபெற்றதுடன் நிகழ்வில் ஏனைய பங்குதாரர்கள், கொழும்பு அலுவலக ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்பனோரும் கலந்துகொண்டனர். இந்த முயற்சியானது நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி கொழும்பு பிரிடிஷ கவுன்சிலின் மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளிற்கு ஒரு வலுவான எடுத்துக் காட்டாகும்.

# கிழக்கிலும் ஓரியன்ட் பைனான்ஸ்




முன்னணி நிதிச் சேவை வழங்குனரான **Orient Finance PLC,**ஆனது செங்கலடி மற்றும் களுவாஞ்சிக்குடியில் இரண்டு புதிய கிளைகளைத் திறந்துள்ளது.

இதன்மூலம் தமது சேவைகளை கிழக்கு மாகாணத்தில் வலுப்படுத்தியுள்ளது. இந்த புதிய கிளைகள் உள்ளடங்கலாக ஓரியன்ட் பைனான்ஸின் மொத்த கிளை வலையமைப்பு 37 ஆக அதிகரித்துள்ளது. இதன்மூலம் நிறுவனத்தின் விரிவான நிதித் தீர்வுகளுக்கான பரந்த வலையமைப்பையும் உறுதி செய்கின்றது.

கிழக்கு வாழ் சமூகத்தவரின் தனித்துவமான நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும் அவர்களின் தேவைகளுக்கும் வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள **Orient Finance PLC,** தமது வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிதிச் சேவைகளின் விரிவான அம்சங்கள் பலவற்றை வழங்குகின்றது. இந்தச் சேவைகளில் நிலையான வைப்புகள்,சேமிப்புக் கணக்குகள், குத்தகை,தங்கக் கடன்கள், மாற்று நிதித் தீர்வுகள், பெருநிறுவன நிதியுதவி உட்பட ஏராளமான சேவைகள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.